# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.2/2023

## CNR.No.TNCB19000

Date: 10.12.2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பழனிச்சாமி | **வயது** | 75 |
| **த/பெ** | மாறன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | சம்பரவள்ளி புதூர், சிறுமுகை | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 10th December 2024.
**வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில்** குறுக்கு விசாரணை

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும். என்னுடைய அறிவுறுத்தலின்பேரில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யார் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பூமி கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். எனது அப்பா, அம்மா பெயரில் உள்ள பூமியில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். இரும்பொறை கிராமத்தில் க.ச.எண். 805 ல் மொத்தம் 22.72 ஏக்கர் அடக்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா பெயர் மாறன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு கருப்பன் என்ற சகோதரர் இருந்தார் என்றால் சரிதான்.

எனது அப்பா மாறனும் எனது பெரியப்பா கருப்பனும் இளவராக இருக்கும் பொழுது 17.05.1925 தேதியில் அவர்களுடைய தாயார் கார்டியனாக இருந்து க.ச. எண்.805 காலையில் 5 ஏக்கர் 68 செண்ட் பூமியினை கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு 27.03.1939 தேதியில் கருப்பன் மற்றும் மாறனின் தாயார் தனது பெயரில் 5 ஏக்கர் 68 செண்ட் பூமியினை க.ச.எண்.805 பூமியில் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 17.05.1925 மற்றும் 27.03.1939 ஆகிய கிரைய ஆவணங்களின்படி க.ச.எண்805 மொத்தம் 13 ஏக்கர் 36 செண்ட் விவசாய நிலம் ஆகியவை எனது தகப்பனார் மாறன் மற்றும் பெரியப்பா கருப்பன்ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

எனது பாட்டி வீராள் இறப்பிற்கு பின்னிட்டு அவர்களுடைய மகன்கள் மாறன் மற்றும் கருப்பன் ஆகியோர்கள் தலா 5 ஏக்கர் 68 செண்ட் பூமியை பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை வாய்மொழியாக செய்யப்பட்டது என்றும் எழுத்து மூலமாக செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பா மாறன் பாகத்திற்கு யார் வாரிசு என்றால் சுப்பன், நஞ்சுக்குட்டி, பொன்னுச்சாமி மற்றும் நான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் க.ச.எண்.805 ல் உள்ள 5 ஏக்கர் 68 செண்ட் மற்றும் இதர பூமிகளை பொறுத்து தனது மனைவியையும் சேர்த்து 26.09.1988 தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

அந்த பாகப்பிரிவினை பத்திரப்படி எனது சகோதரர்களுக்கு சம பங்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 29.06.1988 ஆவணப்படி எனது தகப்பனார் மற்றும் எனது தாயார் சொத்தில் ஒரு பகுதியினை அவர்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவித்து வந்து அவர்கள் காலத்திற்கு பின்னிட்டு அந்த சொத்தானது நஞ்சுக்குட்டிக்கு முழுமையாக கிடைக்கக்கூடியது என்று பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 29.06.1988 தேதியில் இரும்பறை கிராமம் க.ச.எண்.805 காலையில் உள்ள 5. 68 ஏக்கர் பூமியினை பாகம் பிரித்துக்கொள்ளும்போது 4.58 ஏக்கர் பூமி மட்டும்தான் பாகப்பிரிவினை ஆவணத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதுமட்டும்தான் அனுபவித்தில் இருந்தது.

மீதமுள்ள 1 ஏக்கர் 10 செண்ட் பூமியை எனது தகப்பனார் மாறன் அவர் தனது அனுபத்தில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த 1 ஏக்கர் 10 செண்ட் பூமியை 26.09.1988 தேதியில் பாகப்பிரிவினை பத்திரத்திற்கு கட்டுப்பட்டது கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஏக்கர் 10 செண்ட் பூமியை 06.09.1996 தேதியில் எனது தகப்பனார் மாறன் எனது சகோதரர் நஞ்சுக்குட்டிக்கு ஒரு கொடிசில் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா எந்த தேதியில் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் 01.07.2008 ம் தேதியில் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

எனது அப்பா இறக்கும் போது அவருடைய வயது 90 இருக்கும். எனது தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டு 29.06.1988 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படியும் 06.09.1996 தேதிய கொடிசில் பத்திரப்படியும் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் எனது தகப்பனாரும் சேர்ந்து செய்து கொண்ட பாகப்பிரிவினைப்படி அவரவர் பங்கில் விவசாயம் செய்தும் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப் பத்திரப்படி யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு 2 ஏக்கர் விஸ்தீரணம் வழங்கப்பட்டது. நஞ்சுக்குட்டிக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது

என்றால் 5 -1/2 ஏக்கர். சுப்பனுக்கு 5 ஏக்கர் பாத்தியப்பட்டது. பொன்னுச்சாமிக்கு 5 ஏக்கர் பாத்தியப்பட்டது. எனது தாய் தகப்பனார் எவ்வளவு விஸ்தீரணம் வைத்துக் கொண்டார்கள் என்றால் ஆளுக்கு தலா 50 செண்ட் எழுதப்பட்டது. நான் சொன்னதுபோல்தான் அவரவர்கள் பூமியை சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நஞ்சுக்குட்டி உயிருடன் இருந்தகாலத்தில் அவருடன் நான் சகோதரன் என்ற முறையில் நல்ல உறவுமுறை இருந்தது என்றால் சரிதான்.

நஞ்சுக்குட்டி உயிருடன் இருந்த காலம் வரை அவர் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை மாற்றி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நஞ்சுக்குட்டி பெயரில் உள்ள பத்திரப்படி வருவாய்துறை ஆவணங்கள் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அவர்களால் நஞ்சுக்குட்டி பெயரில் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நஞ்சுக்குட்டி அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்து வந்ததற்காக சிட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நஞ்சக்குட்டியிடமிருந்து 1 ஏக்கர் 13 செண்ட் பூமி க.ச.எண்.794/1, 794/2, 909/3 சி, 913/4, ஆகிய காலைகளிலிருந்து நான் விலைக்கு வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு இல்லாமல் நஞ்சுக்குட்டி மீது வேறு வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்றால் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.